திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2020

ஸப்தகிரி இலவச இணைப்பு




## பக்த பிரகலாத வரதன் நரசிம்மன்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்-பால ஸப்தகிரி

பிரம்மோத்ஸவத்தில் "பால" கிருஷ்ணனாக சிறார் கலைஞர்

tirumalai tiruppati tēvastāṉam

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



"ஸப்தகிரி" இலவச இணைப்பு

மே 2020

மலர்–01 இதழ்–03

| உள்ளுறை | பக்கம் |
|---|---|

**இந்துக்கடவுள்கள் : கூர்ம அவதாரம்** 04
*- திருமதி. டி.எஸ். ராஜலஷ்மி, கேரளா.*

**பன்னிரு ஆழ்வார்கள் : பூதத்தாழ்வார்** 06
*- திரு. ஜெ. சுவாமிநாதன், சென்னை.*

**கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீவியாசராஜர்** 08
*- திருமதி பா. காயத்ரி, கேரளா.*

**சித்திரக்கதை : அபிஷேகத்திற்கு ஆகாச கங்கை** 10
*கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.*
*தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்.*
*சித்திரம் : திரு. கே.துவாரகநாத்.*

**நீதிக்கதைகள் : பெற்றோரை போற்றுவோம்** 14
*- திரு. சத்யதாரா, சென்னை.*

**சிறந்த சிறுவன் : செல்வன் இ.சக்ரதர்** 16

**புதிர் : வினா–விடை** 17
*- திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி.*

**சித்திரம் வரைதல்** 18

முன்னட்டை : **பக்த பிரகலாதனும் பக்தவத்ஸலனும்**
பின்னட்டை : **அஞ்சலி முத்திரையில் அனுமன்**

இந்துக்கடவுள்கள்

மஹாவிஷ்ணுவின் பிரதான பத்து அவதாரங்களில் இண்டாவது அவதாரமாகக் கூர்மாவதாரம் விளங்குகிறது. “கூர்மம்” என்றால் “ஆமை” என்பது பொருள். பகவான் ஏன் ஆமையாக அவதாரம் செய்தார் தெரியுமா?

தேவர்கள் அசுரர்களிடையே யுத்தம் நடந்தது. அதில் துர்வாச முனிவரின் சாபத்தால் இந்திரன் தோல்வியுற்றான். உடனே மஹாவிஷ்ணுவிடம் இந்திரன் பிரார்த்தனை செய்தான். பகவான், மந்தர மலையை மத்தாகவும், வாசுகி எனும் பாம்பை கயிறாகவும் கொண்டு, பாற்கடலை கடைந்தால் பல வெற்றி தரக்கூடிய பொருட்கள் கிட்டும் என்று கூறினார்.

அவ்வாறு செய்த போது மந்தர மலை அழுந்தி பாற் கடலை கடைய முடியாமல் போனது. இந்திரனுடன் அசுரர் களும் இதை கேள்விப் பட்டு உதவி செய்ய முன் வந்தார்கள். பகவான் ஆமை வடிவெடுத்து மந் திர மலையை தன் ஓட் டின் மீது தாங்கி னார்.





கௌஸ்துபம் என்ற மணி, பாரிஜாதம் என்ற மரம், சாரங்கம் என்னும் வில், சந்திரன், ஐராவதம் என்ற யானை, காமதேனு என்ற பசு, உச்சைஸ்வரன் என்ற குதிரை, அப்ஸராக்கள், ஸ்ரீமஹாலட்சுமி தாயார் வெளிப்பட்டனர். ஆலகால விஷத்தை பரமசிவனார் அருந்தினார். தந்வந்திரி பகவான் அமுத கலசத்தை கடைசியில் கொண்டு வந்தார்.

இந்த அமுதத்தை அசுரர்களும், தேவர்களும் பருக போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள். பகவான் மோகினி அவதாரம் எடுத்து தேவர்களுக்குக் கொடுத்தார்.

இவ்வாறு கூர்மாவதாரத்தில் பகவான் மஹாலட்சுமியை மணந்து தந்வந்திரியாக தோன்றி அமுதம் அளித்தார்.

ஆழ்வார்கள் இந்த அவதாரத்தை அமுதத்தை விட, பகவானின் கூர்மாவதாரமே மிக சிறந்த அம்ருதம் என்று போற்றியுள்ளார்கள்.



இந்த அவதாரம் பல புராணங்களிலும் இதிகாசத்திலும் மிக சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.


– திருமதி டி.எஸ். ராஜலஷ்மி,
கேரளா.

திருக்கடல்மல்லை என்னும் மாமல்லபுரத்தில் குருக் கத்தி மலரில் (நீலோற்ப மலர்) ஐப்பசி மாதம், அவிட்ட நட்சத் திரத்தில் அவதரித்தவர் பூதத்தாழ்வார். பகவான் ஸ்ரீமந்நாராயணனின் “கௌமோதகி” என்னும் கதாயுதத்தின் அம்சமாக அவதரித்தார். அதனால்தான் இவர் ஒரு வீர வைணவராகவும், வைணவ வளர்ச்சிக்கு வலிமையான அடித்தளத்தை அமைத்தவராகவும் விளங்கினார்.

அருளிய திவ்ய பிரபந்தம் :

**‘‘அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தையிடுதிரியா - நன்புருகி**
**ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்’’**

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிற இயற்பாவில் இரண்டாவது இவர் அருளிய “இரண்டாம் திருவந்தாதி” ஆகும். இந்த பிரபந்தம் அந்தாதித் தொகையில் நூறு பாசுரங்கள் கொண்டது. பூதத்தாழ்வார் அனைவரும் பின்பற்றும் வண்ணம் அன்பைத் தகளியாகவும் (அகலாகவும்), ஆர்வமே நெய்யாகவும், பகவத் விஷயத் தில் உதிக்கும் இனிமையாலே உருகும் நெஞ்சமே இடும் திரியாகக் கொண்டு என் ஆத்மாவும் உருகி, ஞானமெனும் சுடர் விளக்கை ஏற்றினேன், ஞானத்தை



# திருக்கடல்மல்லை பூதத்தாழ்வார்

அளிக்கும் இந்தத் தமிழ்ப் பாமாலையை பகவான் நாராயணனுக்கு விரும்பி சமர்ப்பிக்கின்றேன் என பிரபந்தத்தைத் தொடங்குகிறார். நூறு பாக்களும் பக்தி மணம் தளும்பும். பூதத்தாழ்வாரின் பாடல்களில் இயற்கைக் காட்சிகள் தத்ரூபமாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

''பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்நின்று
இருக ணிளமூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை''

(இரண்டாம் திருவந்தாதி – 75)

**பிறநூல்கள் :**

பக்திப் பாக்கள் தவிர பிற தனிப்பாடல்களும் இவர் இயற்றியுள்ளார். இவரது சில பாடல்களுக்கு உரையாசிரியர்களான பேராசிரியரும் நச்சினார்க்கினியாரும் உரை எழுதியுள்ளனர். “மாபுராணம்” எனும் நூலை இவர் இயற்றியதாகக் கூறுவர்.

பகவான் பூதத்தாழ்வாரிடம் உனக்குத் தேவையானது என்ன? என்று கேட்க, ஸ்வாமி! உன்னிடம் வைத்துள்ள அன்பைத் தாங்குமளவு சுருக்கித் தரவேணும் எனக் கூறி அந்தாதியை முடிக்கிறார்.

பூதத்தாழ்வாரால் பாடப்பட்ட தலங்கள் 12 ஆகும். அவைகள் :

1)திருவேங்கடம், 2)திருக்கடல் மல்லை, 3)திருநீர்மலை, 4)திருப்பாடகம், 5)திருக்கோவலூர், 6)திருமாலிருஞ்சோலை, 7)திருக்கோட்டியூர், 8)திருத்தண்கால், 9)திருக்குடந்தை, 10)தஞ்சை மாமணிக்கோயில், 11)திருவரங்கம், 12) அத்திகிரி (காஞ்சிபுரம்)

திரு. ஜெ. சுவாமிநாதன்

கன்னட ஹரிதாசர்கள்

# ஸ்ரீவியாசராஜர்



அன்பு குழந்தைகளே,

மத்வர்களில் முதன்மையான ஆசாரியரான "வியாச தீர்த்தர்" *(1460–1539)* எனப்படும் வியாசராஜர் எனும் முனிவரைப் பற்றித் தான் பார்க்கப் போகின்றோம்.


ஸ்ரீவியாச தீர்த்தர், கர்நாடக மாநிலத்தில், மைசூர் மாவட்டத்தில், பன்னர் என்னும் ஊரில் 1460 ஆம் ஆண்டில் நடுத்தர குடும்பத்தில், ஒரு முதிர்ந்த தம்பதியினருக்கு, ஸ்ரீப்ரம்மண்ய தீர்த்தரின் அனுக்ரகத்தால் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை, அப்பூரில் ஸ்ரீப்ரம்மண்ய தீர்த்தரிடமே பயின்ற போது, சிறுவயதிலேயே தீட்சை பெற்று வியாச தீர்த்தரானார். இளம் வயதிலேயே காஞ்சிக்குச் சென்று பல பண்டிதர்களை தனது பாண்டியத்தால் வென்றார். பிற்காலத்தில் ஸ்ரீவியாசராஜர் ஸ்ரீகிருஷ்ணதேவராயரின் ராஜ குருவாகி அவ்வரசரையும், ராஜ்ஜியத்தையும் தனது அறிவுரைகளால் காப்பாற்றினார்.

ஒரு முறை ஸ்ரீகிருஷ்ண தேவராயருக்கு "குஹ யோகம்" வர, அச்சமயத்தில் ராஜ்ஜியத்தை தானமாகப் பெற்ற ஸ்ரீவியாசராஜர், குஹ யோகம் "கிருஷ்ண சர்ப" ரூபத்தில் வர, அரியணையில் தனது காவி ஆடையை வைத்து அச்சர்ப்பத்தை பஸ்மமாக்கி, யோகம் முடிந்த அடுத்த நாளே ராஜ்ஜியத்தை அரசரிடம் ஒப்படைத்தார்.

| | |
|---|---|
| **தெலுங்கு மூலம்** | **: திரு.எஸ்.நாகராஜாசார்யுலு** |
| **தமிழாக்கம்** | **: திருமதி பா. காயத்ரி** |

மற்றொரு முறை, சக்ர தீர்த்தத்தில் குளித்து, அதன் கரையில் ஜபித்து கொண்டிருந்த ஸ்ரீ வியாசராஜரிடம், குரங்கு வேடத்தில் வாயு தேவர் வந்து, அக்கரையின் அருகிலுள்ள பாறையிலிருந்து 12 முறை தோன்றி மறைய, 12 முறையும் அப்பாறையின் மீது அவர் "அங்கர ப்ராணதேவரு" என்று கூறி அனுமனை வரைந்தார்.



பின்னர் அவர் ஒரு "ஷடகோணத்தையும்", அங்கர அனுமனைச் சுற்றி அப்பகுதியில் ஒரு வட்டத்தை யும் வரைந்து, 3 கோடி முறை பீஜாக்ஷர மந்திரத்தை ஜபித்து, அவ்விக்ரகத்திற்கு ஒரு சிறப்பு கன்னிதானத்தையும் அளித்தார். அன்று முதல், அது "யந்த்ரோடாரக ஹனுமன்" கோயில் என்று புகழ் பெற்று விளங்குகிறது.

இங்ஙனே, நிறைய அதிசயங்கள் புரிந்த ஸ்ரீ வியாசராஜர் 8 மார்ச், 1539 அன்று சமாதி அடைந்தார். அவருடைய பிருந்தாவனம் ஹம்பிக்கு வெகு அருகிலுள்ள, அனேகுண்டி அடுத்து ஓடும் துங்கபத்ரா நதியிலுள்ள நவ பிருந்தாவனம் எனும் தீவினுள் அமைந்துள்ளது.

இன்றும் சமாதியிலிருந்து பக்தர்களுக்கு அருள் வழங்கும் அவர் நான்கு ஆசிரமங்களை நிறுவினார். அவ்விடங்கள் 1) மைசூர், 2)பங்களூர், 3)காஞ்சி, 4)திருமலை ஆகும்.


## சித்திரக்கதை


# அபிஷேகத்திற்கு ஆகாச கங்கை


கதை : திரு. ம. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
தமிழாக்கம் : திரு. வ.ஜெ.சுரேஷ்
சித்திரம் : திரு. கே. துவாரகநாத்



திருவேங்கடமுடையானின் அபிஷேகத்திற்கான புனித நீரை பாபவிநாசனம் தீர்த்தத்திலிருந்து பக்தியுடன் திருமலை நம்பிகள் தினமும் சுமந்து கொண்டு வருவார். ஒரு நாள் ஒரு வேடுவன் இவருக்கு எதிரே வந்து...




4
எளிதில் முடியும்படி இருந்தால் சொல்
அங்கே ஒரு புனித தீர்த்தம் உள்ளது. வாருங்கள்... காண்பிக்கின்றேன்
6
அப்படியே ஆகட்டும். தினமும் இங்கிருந்தே கொண்டு செல்கிறேன். நீங்கள் யார்?
இருவரும் அங்கு சென்று பார்க்க... அங்கு தீர்த்தம் இல்லை. உடனே வேடுவன் அம்பால் மலையை துளையிட்டான். அத்துளையிலிருந்து புனிதமான நீரூற்று உண்டானது.
5
ஸ்வாமி! இது ஆகாச கங்கை... இந்நீர் மிகவும் புனிதமானது. தினமும் வந்து இந்நீரை அபிஷேகத்திற்கு கொண்டு செல்லுங்கள்
7
ஸ்வாமி! ஏன் இந்த பார்வை... என் மோகன ஆட்டம் தெரிகின்றதா என்ன?
நீ... வேடுவனா? இல்லை... என் ஸ்வாமியா?



உற்றுப் பாருங்கள்!
உண்மை உமக்கே புரியும்!
உண்மை புரிந்தது. தேவரீர், நீர் வேடுவனல்ல!
தேவரீர் என் ஸ்வாமியே!
8
9
அது வரை பகட்டான சிரிப்புடன் இருந்த வேடுவன் நொடிப் பொழுதில் திருவேங்கடவனாக மாறி மாயமானார். திருமலை நம்பிகளின் திருக்கரத்திலும் உடைந்த பானை மறைந்து புதுப்பானை வந்தது.
ஶ்ரீநிவாசா! என்ன உன் திருலீலை அற்புதம்... பரம அற்புதம்! எனக்கு அருள் புரியவே வந்தாயா?
வேகமாக புதுப்பானையில் ஆகாச கங்கை தீர்த்தத்தினை நிரப்பிக் கொண்டு திருமலை நம்பிகள் ஆனந்த நிலையத்தை சென்று அடைந்தார்.
அர்ச்சகரின் திருவுள்ளத்தில் புகுந்த ஸ்வாமி...
10
இனி ஆகாச கங்கை தீர்த்தத்தினையே என் அபிஷேகத்திற்கு பயன்படுத்துங்கள்!
கோவிந்தா! கோவிந்தா!







திருமலை நம்பிகளை ஸ்ரீசைலபூர்ணர் என்றும் அழைப்பர். இவர் இராமாநுஜருடைய தாய்மாமன் மற்றும் குருவுமாவார். தற்பொழுதும் இம்மகானின் சேவையை நினைவு கூறும் வகையில் திருமலையில் அத்யயனோத்தவம் நிறைவுற்ற பிறகு "தண்ணீரமுதோத்ஸவம்" நடத்துவது சாம்பிரதாயமாக நடத்தப்பட்டு வருகிறது.

அடுத்த இதழில்... ஸ்வாமி புஷ்கரணியில் நீராடியவுடனே தர்ம குப்தனின் பித்து எங்ஙனே குணமாயிற்று என்பதை படித்து மகிழ்வோம்!

முற்றும்.

குழந்தைகளே,

ஒளவையார் அருளிய “கொன்றை வேந்தன்” எனப்படும் ஒரு அற்புதமான நூலில் குழந்தைகளுக்கு பல ஒப்பற்ற உயர்ந்த அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

முதல் படியாக **''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'', ''தாயிற் சிறந்த கோயிலும் இல்லை....தந்தை சொல் மிக்க மந்திரமில்லை''** எனப் பெற்றோரின் பெருமையைக் கூறுகிறார். இந்த உண்மையை தெய்வத்திரு கதாபாத்திரங்கள் கொண்ட ஒரு சிறு புராணக்கதை மூலம் அறியலாமா?...”

ஒரு முறை கைலாயத்தில் பரமேஸ்வரனும் பார்வதியும் தங்களது செல்வங்



# பெற்றோரை

– திரு. சத்யதாரா, சென்னை.

களான விநாயகப் பெருமானையும், முருகப் பெருமானையும் அணைத்தவாறு வீற்றிருந்தனர். அப்போது தேவரிஷி ஸ்ரீநாரதர் அவ்விடம் வருகிறார். “நாராயணநாராயண...” என்று வழக்கமான நாம ஸ்மரணையுடன், கையில் ஒரு ஞான பழத்துடன் வருகிறார். ஈஸ்வரன்... கலகப்பிரியரான நாரதரை நோக்கி... என்ன நாரதரே இன்று உங்களுக்கு வேறிடம் கிடைக்கவில்லையா? என்று நகையாடுகிறார். ஈஸ்வரா... அபூர்வ ஞானத்தினை வழங்கும், அரியதொரு ஞானப்பழம் எனக்கு கிடைத்துள்ளது. அதை தங்களிடம் சமர்ப்பிக்கவே வந்தேன். இப்பழத்தை பின்னப்படுத்தாமல் உயர்ந்த உள்ளம் கொண்ட ஒருவருக்கு இதனை அளித்திட வேண்டும் என்றார்.

ஈஸ்வரனோ... இங்குள்ள நமது குழந்தைகளில் இதனை ஒரு வருக்கு அளிக்கலாம். அதற்கு ஒரு சிறிய போட்டியை வைக்கலாம் என்கிறார். அம்பாளும் அதனை ஏற்றுக் கொள்கிறார். விநாயக ரையும், முருகனையும் அழைத்து, "நீங்கள் இருவரும் இந்த உல கினை ஒரு முறை சுற்றி வர வேண்டும். முதலில் யார் சுற்றி முடிக் கின்றீர்களோ... அவருக்கு இந்த ஞானப்பழம்..." என்று ஒரு நிபந் தனை வைக்கிறார். உடனே முருகப்பெருமான் தனது மயில் மீதேறி உலகைச் சுற்றி வர வேகமாகப் புறப்படுகிறார். விநாயகரோ,... ஈஸ்வரனையும் அம்பாளையும் ஒரு முறை வலம் வந்து வணங்கி விட்டு, "வென்று விட்டேன் நான், பழத்தினை எனக்குத் தாருங்கள்" என்கிறார். "எவ்வாறு நீ வென்று விட்டதாகக் கூறுகிறாய்" என்று அம்பாளும், ஈஸ்வரனும் கேட்கிறார்கள்.

# போற்றுவோம்



விநாயகர் அளித்த பதிலில் தான் இந் தக் கதையின் "நீதியே" பொதிந்து கிடக் கிறது. "மகனுக்கு... தாயும் தந்தையும் தானே முதல் கடவுள். தெய்வ வடிவமான தங்கள் இருவரையும் வலம் வந்தால்... இந்த உலகத்தையே வலம் வந்தது போல் ஆகும்... இல்லையா? இது சத்தியம் தானே? "என்கிறார். ஈஸ்வரனும் அம்பாளும்... வேறு வழியின்றி விநாயகர் கூறியதை ஏற்றுக் கொண்டு ... ஞானப் பழத்தினை கொடுத்து விடுகின்றனர். விண்ணுலகம் ஆனாலும் சரி... மண்ணுலகம் ஆனாலும் சரி... விநாயகரின் வாதத்தினை எவராலும் மறுக்க இயலுமா?

குழந்தைகளே தெய்வத்திற்கும் மேலான நம் தாய் தந்தை யரை வணங்கி அவர்கள் கூறும் வழியில் நடந்து மேன்மை அடை வோம்.



# சிறந்த சிறுவன்

| | |
|---|---|
| பெயர் | – இ.சக்ரதர் |
| வகுப்பு | – 2ஆம் வகுப்பு |
| பிறந்த தேதி | – 26–11–2012 |
| தந்தை பெயர் | – திரு. இ.வெங்கட ரமேஷ்,<br>சீனியர் ஜெ.சி.ஓ., இந்திய இராணுவம் |
| தாய் பெயர் | – திருமதி டி.ஶ்ரீதேவி,<br>சீனியர் ஆப்செட் பிரிண்ட்டர்,<br>தி.தி.தே. அச்சகம், திருப்பதி. |
| பள்ளி | – மேக்மை பேபி ஜீனியஸ், திருப்பதி. |

## இச்சிறுவன் சாதித்த வெற்றிகள் :

### எல்.கே.ஜி.யில்...

- 22–04–2017 அன்று 78 நொடிகளில் 210 பெயர்களை சரளமாகக் கூறியது
- 05–06–2017 அன்று 200 மாணக்கர்கள் மத்தியில் 100 வேமனப் பாடல்களை தங்குத்தடையின்றி ஒப்புவித்ததனால் ஜூனியர் புக் ஆப் ரிக்கார்ட் மற்றும் வண்டர் புக் ஆப் ரிகார்டில் பெயர் இடம் பெற்றது.

### யு.கே.ஜி.யில்...

- வேமனசதக ரத்ன விருது
- கீதா பால விருது (12,15 அத்தியாயம்)
- 03–06–2018 100 வேமனப் பாடல்களை 300 மாணக்கர்கள் மத்தியில் தங்குத்தடையின்றி ஒப்புவித்ததால் ஜீனியஸ் புக் ஆப் ரிகார்ட் மற்றும் வண்டர் புக் ஆப் ரிகார்டில் பெயர் இடம் பெற்றது.

### 1ஆம் வகுப்பில்...

- க்ஷணித கணித விருது – 20 வாய்ப்பாடுகளை தங்குத்தடையின்றி ஒப்புவித்தல்

புதிர்

# "வினா–விடை"

1. பவளிம்பு சேவையின்போது திருமலையப்ப ஸ்வாமிக்கு காண்பிக்கும் ஆரத்தியின் பெயர் என்ன?

   அ) கும்ப ஆரத்தி ஆ) முத்தியால ஆரத்தி
   இ) கற்பூர ஆரத்தி ஈ) பவளிம்பு ஆரத்தி

2. தமிழில் இராமாயணத்தை இயற்றியவர் யார்?

   அ) கம்பர் ஆ) அகத்தியர்
   இ) காளிதாசர் ஈ) துளசி தாசர்

3. கண்ணகி எரித்த ஊரின் பெயர் என்ன?

   அ) திருக்கடல்மல்லை ஆ) மதுரை
   இ) பழமுதிர்சோலை ஈ) தஞ்சாவூர்

4. கீதையை உபதேசித்தவர் யார்?

   அ) தருமர் ஆ) ராமர்
   இ) கிருஷ்ணர் ஈ) அர்ச்சுனர்

5. திருவேங்கடவனின் பட்டத்துராணியாக திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் தாயார் பெயர் என்ன?

   அ) மஹாலக்ஷ்மி ஆ) ஸ்ரீதேவி
   இ) பூதேவி ஈ) பத்மாவதி

6) திருத்தொண்டர் புராணத்திற்கு வேறொரு பெயர்?

   அ) பிரம்ம புராணம் ஆ)பெரிய புராணம்
   இ) பத்ம புராணம் ஈ) சிவ புராணம்

7) திருமலை திருச்சன்னதியில் படியாக நிலைகொண்டிருக்கும் ஆழ்வார் யார்?


   அ) அநந்தாழ்வான் ஆ) திருமங்கையாழ்வார்
   இ) குலசேகராழ்வார் ஈ) பெரியாழ்வார்

திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி

1) ஆ, 2) அ, 3) ஆ, 4) இ, 5) ஈ, 6) ஆ, 7) இ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...



திருமலையில் வேதபாராயணம் பண்ணும் வேத மாணாக்கர்கள் குழு

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-05-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742. Postal Regd.No.TRP/12- 2018-2020, Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

